907
907
4-54
6 - DEC 1954
MADRAS

உ

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. கார்த்திகை, ௪ 19—11—54 தளிர்-7

சிந்தனைச் செழுமை

திரு. வி. க. வின் மனதில் சீர்திருத்தத் திண்மையும் வளர்ந்தே வந்தது. அவருடைய சிந்தனையிலே செழுமை இருந்தது. அதனால்தான் சீர்திருத்தத்திலே திண்மை பெற அவரால் முடிந்தது. சீர்திருத்தம் என்றால், பிற நாட்டுப் பழக்க வழக்கத்தினை அப்படியே பின்பற்ற வேண்டுமெனப் பலர் கருதுகின்றனர். உண்மையான சீர்திருத்தம் அதுவல்ல; நல்லன அமைவதே சீர்திருத்தமாகும்.

பிறர் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியாத சீர்திருத்தத்தை வாயாற் பேசிப் பயனில்லை. எளிமையும், தூய்மையும் சீர்திருத்தத்திற்கு முதற்படியாகும். உயரமான மாளிகையின் மேலே செல்வதற்கு ஒவ்வொரு படியாக ஏறிச் செல்வதுதான் நல்லது. 'விரைவாகப் போய்ச் சேரவேண்டும்' என்ற உணர்ச்சி வயப்பட்டு மூன்று படிகளையும் ஒரே தடவையாகத் தாண்டுதல் அறிவுடைய செயலல்ல. பார்ப்பதற்கு அத்தகைய செயல் ஒரு காட்சியாக இருக்குமேயன்றி, பலரும் பழக்கத்திலே செய்ய இயலாது.

பலரும் கடைப்பிடிக்க முடியாத செயல்கள் பேச்சுக்கு அழகாக இருக்கலாம்; வாழ்க்கைக்கு அழகாக அமையவேண்டுமே? பிறர் எளிதாகப் பின்பற்றக்கூடிய சீர்திருத்தமே சிந்தனையின் செழுமையில் மலர்வதாகும். இத்தகைய சீர்திருத்தம் திரு. வி. க. வின் சீர்திருத்தமாகும்.

திரு. வி. க.வின் சீர்திருத்தக் கொள்கைகள் பற்றிச் சுருங்கக் கூறவேண்டுமானல் கீழ்க்கண்ட தலைப்புகளில் அடங்கும்.

1. பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டுதல் கூடாது. 'சாதி' என்ற ஒரு சொல் தமிழ்ச் சொல்லே அல்ல.

2. குலம் என்பது சாதியைக் குறிக்கும் சொல்லாகாது. ஒரு பெரிய வீட்டில் பல அறைகள் இருக்கலாம். அந்த அறைகள் பெரிய வீட்டின் ஓர் உறுப்பேயாகும். குண வேறுபாடு கருதித்தான் குலம் என்ற பிரிவு அமைக்கப்பட்டது.

3. பெற்ற தாயைப் பேணுவதுபோலவே பிறந்த நாட்டையும், பேசும் மொழியையும் மக்கள் கட்டிக் காத்தல் வேண்டும்.

4. பெண்மக்களை அடிமையாகக் கருதுதல் கூடாது. மனித வாழ்க்கை என்பது பெண்ணும் ஆணும் சமநிலையிலே இன்பம் காண்பதே. துறவு என்பது பெண்ணைப் பழித்துத் தூற்றுவதல்ல. இளமையிற் கைம்மை (கணவனை இழத்தல்) ஏற்பட்டால் விரும்பின் அப் பெண்ணுக்கு மறுமணம் செய்தல் வேண்டும்.

5. தொழிலாளர்கள் என்பவர்க்குக் கல்வியறிவு தேவை. ஓய்வும், ஊதியமும் அவர்கட்கு அளிக்கப் பெறுதல் வேண்டும். கல்வியறிவு இருந்தால்தான் அவர்களின் உள்ளத்திலே கடமை உணர்ச்சி தோன்றும்.

6. சமய வேற்றுமைகளால் சண்டையிட்டு இறைவனைக் காணமுடியாது. இறைவன் நிலையைச் சமரச சன்மார்க்க வழியிற் சென்றே அடைய முடியும். எவ்வுயிரையும் தம்முயிர்போலக் கருதி, அன்பு பாராட்டித் தொண்டு செய்வோர்க்கே இறைத்தன்மை எய்துதல் எளிதாகும். திருவள்ளுவர், திருநாவுக்கரசு, புத்தர், ஏசு, நபி முதலிய பெருமக்கள் அன்பு வழியிலேயே இறைத்தன்மை அடைந்தவர்கள்.

இப்படியாக அவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் மிளிரும். இவைகள், திரு. வி. க. அவர்கள் நூல்களில் பரந்து காணப்படும் அரிய கருத்துக்களின் சுருக்கமாகக் குறிக்கப் பெற்றன.

—தி. மா. பரமசிவம், திருச்சி.

னால் இருவராலும் புலன் வசப்படாமல் இருப்பது சாத்தியமா? அவ்வித அனுபவத்தில்தான், பரமஹம்சர் தம்முடைய தெய்விக மன எழுச்சியை விளக்கினார். ‘இந்த மாமிசம், ரத்தம், இவைகளாலான உடலை வேண்டுகிறதா இவ்வுள்ளம், இல்லை ரூபமற்ற பரப்பிரும்மத்தை நாடுகிறதா?’ என்று தம்மையே கேட்டுக்கொண்டு, பிறகு விடையையும் தமக்கே அளித்துக் கொள்வாராம். அவர் அடைந்த நிலை அச்சமயங்களில் சமாதியே. பிறகு தம்மைச் சுற்றியவைகளின் ஞாபகமே இருக்காது. பல மணி நேரம் உலகத்தையே மறந்து இடப்பார்

சாரதாமணியின் தயார் என்னவிருந்தாலும் சாமான்ய மனம் படைத்தவர்தானே! ஆகையால், அவள் தன் மகளின் வாழ்க்கை வீணானதாய்க் குறை சொல்லி, மாப்பிள்ளையின் காது கேட்க வருத்தப்பட்டாள். அவளிடம் பரமஹம்சர் சொன்ன மொழிகள் மிகவும் அர்த்த முள்ளனவாயிருந்தன. உங்கள் மகளுக்கு ஒன்றல்ல, கணக்கிலடங்காத மக்கட்பேறு ஏற்படும். ‘தாயே, தாயே’ என்ற சொல் அவள் செவிகளில் ஒலித்து ஒலித்துச் சலிப்புண்டாக்கும் அளவு ஆகும். கவலைப்படாதீர்கள் என்றாராம். ஆம், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் நிறுவப்பெற்றபின் எவ்வளவோ சீடர்கள் சாரதாமணி தேவியைத் ‘தாயே’ என்று சதாசர்வ காலமும் அழைத்துவந்ததைப் பிற்காலத்தில் பார்த்தவர்கள் அன்று பரமஹம்ஸர் சொன்னதன் உண்மையை நிச்சயம் அறிவார்கள்.

இம்மாதிரி இன்னும் எவ்வளவோ அற்புத வரலாறுகள் தேவியாரைப் பற்றி உள்ளன. சாமான்யப் பெண்மணி அல்ல சாரதாமணி என்பதை நிரூபிக்க அவை சான்றாகும். அவருக்கு வயசு முப்பத்திரண்டு முடிவதற்குள் புருஷன் காலமானார் ஆயினும் அவர் வரையில், என்றும் சமீபத்தில் கணவரை வைத்திருப்பதுபோன்ற ஒரு பாவம் இருந்ததைப் பிற்பாடு அநேக சீடர்கள் விவரித்துள்ளனர். உணவைச் சமைத்ததும், பரமஹம்ஸருக்கு நைவேத்தியம் செய்த பின்தான் தாம் உட்கொள்ளுவார் தேவி. நிஜமாகவே தமது பதி உணவைப் புசிப்பதான பாவம் அவரிடம் இருந்ததைக் குறிக்கப் பல அத்தாட்சிகள் கூறப்படுகின்றன.

அற்புத நிகழ்ச்சிகளும், அதிசய அனுபவங்களும் எவ்விதமாயினும், தேவியாரின் வாழ்க்கையை ஊன்றி நோக்குகிறவர்களுக்குப் பல அரிய உண்மைகள் வெளியாகின்றன. எளிமையும், மிருது சுபாவமும் அவரிடம் அடைக்கலம் புகுந்தன. தமது கணவரின் சீடர்களிடம் தேவியாருக்கிருந்த கனிவும் ஆதரவும் கரை கடந்தவை. தமது சமயப்பற்று நிலைப்பதன் சூட்சுமம் என்ன என்பதைத் தேவியார் சீடர்களுக்கு விளக்கியதுண்டு. உண்மையில் தெய்விக வாழ்க்கையின் ரகசியம் நிகழும் அதிசய சம்பவங்களால் அல்ல என்பதை, அடிக்கடி அவர் உணர்த்தியவர். ஒரு சமயம் பரமஹம்ஸரின் சீடர்களில் சில முக்கியமானவர்களிடம் அவர் கூறியதை உணர்ந்தால் எவ்வளவு தூரம் தெய்விகம் அவரிடம் சித்தித்திருந்ததென்னும் கருத்துப் புலனாகும்.

‘ஈஸ்வரனை சாக்ஷாத்காரம் செய்வதால் என்ன விளையும்? தலையில் கொம்பு முளைக்குமா? இல்லை. ஒருவருக்கு உள்ளத்தில் தூய்மை உண்டாகும். தூய்மையான எண்ணங்களினால் சித்த பரிசுத்தியினால், ஞானம் சித்திக்கும்.’

இன்று அவரைப் பற்றி எதை அறிவதானாலும் ஒன்றை மறக்கவே கூடாது தாய்மை அவரிடம் பரிபூர்ணமடைந்திருந்ததையே நினைக்கவேண்டும். பிறரிடம் குறைகளை நோக்கிப் பார்க்கும் இயல்பே அவரிடம் கிடையாதபடி செய்தது அவருடைய தாயின் உள்ளமென்றால் மிகையன்று. சேயின் களங்கமில்லாத மனப்பாங்கு அவரிடம் சதா வளர்ந்ததால், பிறர் செய்த தவறுகள் மிக மிகச் சிறியவைகளாகவே அவர் கண்களில் பட்டன. சீதையிடம் ஹனுமார், ராட்சஸிகளைத் தாம் கொன்றுவிடுவதாக, உறுதி கூறி அனுமதி கேட்டவுடன், தாயுள்ளம் நிரம்பிய சீதை சொன்னாள்: ‘அப்பனே, உலகில் தவறு இழைக்காதவர்கள் யார்? யாரும் தவறு செய்வது சகஜம். ராவணனுடைய ஏவலில் நிற்கும் இவர்கள் செய்தவைகளை நினைத்து இவர்களை வதை செய்வது நியாயமல்ல’ என்று; பணிப் பெண் ஒருத்தி செய்த பிழைக்காக மடத்தில் யாரோ அவளைத் தூற்றினாள். சாரதாமணி தேவியார் அவ்விடம் வந்து விசாரித்ததும், குற்றம் சாட்டியவள் சொன்னாளாம்: ‘அம்மணி, உங்களுக்குப் பிறரிடம் தவறே தெரியாதே! இதில் நீங்கள் விசாரணை செய்தென்ன பயன்?’ என்று

—சு. (வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்: மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)

அருள் துறை

பெண்குல விளக்கு

இந்திய நாகரிகமும் இந்தியப் பண்பாடும் அழிவற்ற நிலையை எய்தியதற்குப் பல காரணங்கள் கூறலாம். அதாவது, பாரத பூமியில் நிகழ்ந்த பல உயர்ந்த சரித்திர வரலாற்றைக் குறிக்கலாம். நாரத கானம் உலவிய நாடு, புத்தர்பிரான் அருள் பொங்கிய நாடு, ராமனையும் கிருஷ்ணனையும் போன்ற சத்திய வீரர்கள் மலிந்த நந்நாடு என்றெல்லாம் சொல்லலாம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, பெண்கள் தங்கள் உயர்ந்த தருமத்தைப் பேணி வாழ்ந்த காரணத்தினாலே ஆண்களும் மேன்மை அடைந்ததற்குச் சௌகரியமுண்டானதோர் அதிசயத்தை, இந்த நாட்டின் இடையறாது வந்துள்ள மரபை ஆராய்ந்தால் விளங்கும். சீதையின்றி ராமன் இவ்வளவு போற்றப்படுவானா என்பது சந்தேகம். சுவாமி விவேகானந்தர் ஒரு சமயம் சென்னையில் பேசுகையில் கூறினதை ஞாபகப்படுத்திக்கொண்டால் இதன் உண்மை ஊர்ஜிதமாகும். 'ராமர்கள்கூட அநேகம் இருந்திருக்கலாம் உலகில்; சீதைகள் கிடையா. சீதை தனிதான்; ஒரே ஒரு தடவைதான் அவள் உதித்தாள்; முன்னும் இல்லை, பின்னும் இல்லை'.

சீதை போட்ட பாதையில் கால் நோகாமல் நடந்த பெண்களின் வரிசையொன்றை இங்குதான் பார்க்கலாம். அவ்வித பரம்பரையில் தோன்றியவர் ஸ்ரீ சாரதாமணி தேவியார். இருபதாவது நூற்றாண்டின் அதிசயங்களில் இவர் வாழ்க்கையும் ஒன்று. உலகமறியும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் என்றொரு மெய்ஞ்ஞானி பத்தொன்பதாவது நூற்றாண்டில் வங்காளத்தில் அவதரித்து, ஜகந் மாதாவான துர்க்கையை சதா பூஜை செய்து, கடினமான அனுட்டானங்களைச் செய்து, பிறகு சமாதி நிலையில் பல காலம் கடவுளுடன் ஐக்கிய பாவத்தை உணர்ந்து, சுவாமி விவேகானந்தர் போன்ற உத்தம சீடர்களை உலக க்ஷேமத்தின் பொருட்டு தயாரித்த பெருமையையுடையவர். அப் பெரியாரின் மனைவியார்தாம் ஸ்ரீமதி சாரதாமணி தேவி. கணவனுக்கும் மனைவிக்கும் அதிக வயசு வித்தியாசம். சுமார் பதினெட்டு ஆண்டுசள் அவர்களைப் பிரித்தன. கல்யாணமாகும் பொழுது தேவியாருக்கு வயது ஐந்தே; கணவனுக்கு இருபத்து மூன்று. இவ்விதமேற்பட்ட தாம்பத்தியத்தில் எதை எதிர்பார்க்க முடியும்? இக்காலமாயின் இவ்வித மணச் சடங்கை ஒரு விளையாட்டாகவே கருதுவார்கள். ஆனால் சிறு பிராயமாயினும், சாரதாமணி தேவியின உள்ளத்தில் தனது பர்த்தா என்றஓர் உணர்வு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் திருமணம் ஆன தினத்தினின்றும் உண்டாகியது.

எத்தனையோ அதிசயச் செய்திகள் புத்தக ரூபமாய் நமக்குக் கிடைத்துள்ளன. அவர்கள் இருவரும் இல்லறம் நடத்தியதைக் குறித்து. தேவிக்கு இருபது வயசு நிரம்பியதும், ஒருநாள் இரவில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளி பூஜைக்காகத் தமது அறையில் சகல ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருந்தார். தேவி அவ்வறையில் நுழைந்ததும், கணவர் அவளை சமிக்ஞை செய்து, பூஜைக்காக விக்ரஹம் வைக்கப்படும் பீடத்தில் மனைவியை உட்காரச் சொன்னார். உத்தரவை மீறாமல் சொன்னபடி செய்யவே, மந்திரங்கள் மூலம் பரிசுத்தப்படுத்திய சாரதாமணி தேவியை ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூஜைசெய்யத் தொடங்கினார் அவ்வளவுதான், சிறிது நேரத்தில் கணவனும் மனைவியும் இருவருமே சமாதி நிலையை எய்தினர். இரவு எவ்வளவு நாழிகை அவ்வித நிலையில் அவர்கள் இருவரும் இருந்தனரோ தெரியவில்லை. ஆனால் அன்று தொடங்கி அவ்விருவர்களுக்குமிடையே புதியதான ஒரு பிணைப்பு ஏற்பட்டது. அதாவது ஜகன்மாதாவாகவே சாரதாமணியைப் பரமஹம்சர் கருதத் தொடங்கினார். 'நான் உன்னை இவ்விதம் மதித்துத் தொழுவதில் உனக்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லையே?' என்று அவர் வினவவும்; தேவி 'இல்லை' என்றே சம்மதித்தார்.

சோதனைகள் எத்தனையோ மூண்டன. ஒரே படுக்கையில் இருவரும் படுத்துறங்குவதென்

தமிழ்க்கு மறுமலர்ச்சி எது?

இலக்கியச் சொற்களை மீண்டும் எடுத்தாள வேண்டும்

ரா. பி. சேதுப் பிள்ளை.

'புதிய கருத்துக்கள் குவியும் காலம் இது. தமிழ் மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டுமென்ற கருத்து வலுத்துவருகிறது. அந்தப் பணியை ஏற்கத் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும். பழைய இலக்கியங்களில் பதிந்துள்ள சொற்களை மீண்டும் எடுத்தாள வேண்டும். இதுதான் மறுமலர்ச்சி. நம் இலக்கியத்திலிருந்து பிறப்பதுதான் மறுமலர்ச்சி.'

'வேளாண்மையை விழுமிய பணியாகக் கொண்ட நாடு தமிழ் நாடு என்பதை வள்ளுவரின் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றல்லார் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற பாட்டிலிருந்து உணரலாம்; கார்மேகத்தை "எழிலி" என்று வள்ளுவர் கூறியிருப்பதால் கரிய மேகத்தை எழில் நிறைந்த பொருளாகத் தமிழர்கள் கண்டனர்.

கலைச் சொற்கள் செறிவு:

'கம்ப ராமாயணத்தில் கலைச் சொற்கள் செறிந்து கிடக்கின்றன. பல்வேறு கலைகளைக் கற்ற கம்பன், கலைச் சொற்களை என்றும் இறவாத கவி மாடத்தில் வைத்துப் பாதுகாத்திருக்கிறான். தமிழ் மொழியை வளம்படுத்த நாம் கம்பன் காவியத்திலிருந்து ஊக்கம் பெற வேண்டும்;

'ஆங்கில இலக்கியம் போல், தமிழில் பழங்கால இலக்கியத்துக்கும் தற்கால இலக்கியத்துக்குமிடையே பெரும் பிளவு கிடையாது. ஆங்கிலத்தில் பழங்கால ஆங்கிலம், புதிய ஆங்கிலம் என்றெல்லாம் உண்டு. அம்மாதிரி தமிழில் இல்லை. சொற்கள் சில இறக்கலாம்; மரத்தில் சில இலைகள் பழுத்து உதிர்வது போலச் சொற்கள் இறந்திருக்கலாம்; ஆனால் மரம் வளர்கிறது; நமது தமிழ் மொழி சாவா மொழி.

சொற்களை ஆக்கும் திறன்:

தமிழில் கலைச் சொற்கள் நிறைய வேண்டுமென்று சொன்னால்மட்டும் போதாது. அதை ஆக்குகின்ற திறனும் நமக்கு வேண்டும்; ஆசிரியர்களாகிய நீங்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும்; சொற்களை ஆக்குதற்குரிய வழிகளைத் தமிழிலக்கணம் காட்டியிருக்கின்றது; நமக்குச் சொற்கள் இல்லையே என்று நாம் மயங்க வேண்டாம்; சொற்களை ஆக்கும் திறன் நம் மொழிக்கு உண்டு என்பதை உணர வேண்டும்; அதில் நமக்கு நம்பிக்கை வேண்டும்; இன்றியமையாதனவாய் இருந்தால் அயல் மொழிகளிலிருந்து சொற்களைச் சேர்த்துக்கொள்ளத் தயங்கக் கூடாது.

வாரம் என்பது வடமொழிச் சொல்; ஏழு நாட்களைக் குறிப்பிடும் சொல்லாக அது தமிழில் வழங்கிவருகிறது; இப்பொழுது, நாளைக் குறிப்பிடுவது தமிழில் கிழமை என்ற சொல்; 'திங்கள்' என்ற தமிழ்ச்சொல் மாதத்தைத் தான்குறிப்பிடும்; வாரம் என்ற வடமொழிச் சொல், ஆதிவாரம், சோமவாரம் என்று நாளையே குறிப்பிடுவது; ஏழு நாட்கள் என்று வடமொழியில் அதற்கு அர்த்தம் இல்லை; எனினும் ஏழு நாட்களைக் குறிக்கும் சொல்லாக அது தமிழ் மொழியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இம்மாதிரி தீராத நிலையில் அயல்மொழிச் சொற்களைச் சேர்த்துக்கொள்வதில் தவறில்லை; தமிழ் இலக்கண நூலாசிரியர் தொல்காப்பியனாரே இதற்கு அனுமதி கொடுக்கிறார்; ஆனால் நம்மிடையே நல்ல சொற்கள் இருக்கும்போது அனாவசியமாக வேற்று மொழிச் சொற்களை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை; சொல் வளம் பெற்ற தமிழ் மொழிக்குச் சொல்லுந் திறமையில்லை என்று பேதையுரைத்ததைக் கண்டு பாரதி புலம்பினார்; பழங்கால இலக்கியங்களில் பொதிந்துள்ள சொற்களை ஆட்சிக்குக் கொண்டு வருவது தமிழுக்கும் நாட்டுக்கும் செய்ய வேண்டிய பணியாகும்.' (சு.)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

தொழில் துறை

கிராமங்களில் தொழில் பெருக;

(ஆங்கிலக் கல்வி நிபுணர் டாக்டர் எல் கே. எல்ம்ஹர்ஸ்ட் கருத்துக்கள்)

1 ஏராளமான புதுத் தொழில்களையும் பெரிய கிராமங்கள் சிறிய நகரங்களில் துணைத் தொழில்களையும் தொடங்கினால் தான் இச் சிக்கலைச் சமாளிக்க முடியும்

2. இந்தியாவில் பயிர்த் தொழிலில் விஞ்ஞானக் கருவிகளைப் புகுத்துவதற்குமுன் 'பாட்டரிகள்' 'ஒர்க் ஷாப்புகள்' முதலிய தொழில் நிலையங்களை ஏற்படுத்தவேண்டும். இப்போது பயிர்த் துறையில் யந்திரங்களைப் புகுத்தினால், வேலையின்மை மிகுதியாகும்'

3. புதிய தொழில்களை ஏற்படுத்தும்போது புதிய பாட்டைகள் முதலிய வசதிகள் கட்டாயமாகும் பாட்டைகள் போடுவதால பலர்க்கு வேலையும் கிடைக்கும் வெளியிடங்களுடன் கிராமங்களுக்குப் பாட்டைகள் இல்லாதது, கிராமங்களின் சீரழிவுக்கு ஏதுவாகும்.

4. வெளியிடங்களில் தயாரிக்கப்படும் பண்டங்களை இந்திய மக்கள் உபயோகிப்பது தவறு; தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களையே கூடுமான வரையில் உபயோகிக்க வேண்டும்.

5. கிராமங்களில் தொழிற்சாலைகளை வளர்க்கக் கிராமங்கள் சர்க்காரையே நம்பியிருக்கக் கூடாது; சர்க்காரால் விறுவிறுப்பாகச் செயலாற்ற முடியாது தனிப்பட்டோரும் சர்க்காரும் சேர்ந்து முயற்சி செய்யவேண்டும்; கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவையாயிருப்பது நிதி வசதி

6. பிரிட்டனில், டெவன் ஷர்ப் பகுதியில் தனிப்பட்டோரின் அமைப்பு ஒன்று, கிராமங்களை வெற்றிகரமாக விருத்தி செய்து வருகிறது; பல் புதிய தொழில்களையும் விவசாயத் துணைத் தொழில்களையும் இந்த நிலையம் கிராமங்களில் தொடங்கி நடத்திவருகிறது; இதைப் போல இந்தியாவிலும் அங்கங்கும் செய்யலாம்.

7 கிராமத் தேவைகள் அனைத்தையும் மொத்தமாகக் கவனித்து இணைப்பான முறையில் தீர்வுகாண முயல்வது நல்லது.

தொழில் வளர்ச்சியும் அரசியலும்:

(பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் அனூரின் பிவான் கருத்துக்கள்)

1. மனித வர்க்கத்தின் வரலாற்றிலேயே சர்வாதிகார ஆட்சிதான் பழைமையான முதல் அமைப்பு; அதன் பிடியை எந்த அளவுக்குத் தளர்த்தும் கட்டாயம் நேர்ந்ததோ அந்த அளவுக்கே முன்னேற்றம் உண்டானது.

2. இது, தனி நபரின் கொடுங்கோன்மைக்குப் பதிலாகச் சொத்துடைமைக்காரரின் கொடுமையை ஏற்படுத்திவிட்டது.

3. இதன் எதிர்ப்பு, தனிமக்களின் உரிமைகளுக்கு எதிராக அரசியல் அதிகாரத்தின் உயர்வை நிலைநாட்டுவது மோனது.

4, மக்கள் உரிமையும் அரசியல் அமைப்பும் சேர்ந்து, பார்லிமென்டு முறை ஜனநாயகம் தோன்றியது.

5, 'பார்லிமென்டு முறை ஜனநாயகமே இந்தியாவுக்குச் சிறந்தது என்றும், இவ்வழியில் பொருளாதார வளர்ச்சியிலும் இந்தியா நிமிர்ந்து நிற்க முடியும் என்றும், சர்வாதிகார ஆட்சியின் சாதனைகளைக் காட்டிலும் அரசியல் ஜனநாயகத்தின் அநுபவ சாத்தியமான சாதனைகள் மிகவும் மகிமை பொருந்தியவை' என்றும் நேரு கருதுவது சரியானது.

6 மக்களின் வாழ்க்கை வசதிகளின் உரிமை ஒடுக்காமல் தொழில் வளர்ச்சி ஏற்பட ஜனநாயகச் சாதனையில் இடம் உண்டு. தொழில் நுட்ப அறிவும் உழைப்பும் வளரவேண்டும்: சுதந்தர அரசியலின் எல்லையில்லாத அநுகூலங்கள் இருக்கும் போதே தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கவேண்டும். இதுதான் முக்கியமாகத் தேவை.

7, உருக்கு உற்பத்திதான் தொழில் நுட்பக் கைத்தொழில் வளர்ச்சிக்குச் சரியான அளவுகோல்! சென்ற ஆண்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் பதினைந்து லக்ஷத்துப் பத்தாயிரம் டன் கச்சா எஃகு உற்பத்தி செய்தன; 1958-க்குள் இருபத்தைந்து லக்ஷம் டன் அளவை எட்ட முடியும் என்று நம்புகிறார்கள்; இது, நல்ல முன்னேற்றமே; ஆயினும், எஃகு உற்பத்தி போதுமானபடி இல்லாதது, அதன் தொழில் வளர்ச்சிக்குப் பெருந் தடங்கலாகவே இருக்கும்.

புனிதச் செயலைச் செய்ய, செல்வந்தர்களும், கல்விமான்களும், அரசாங்கத்தினரும், இதழாசிரியர்களும் முன்வந்து, பேராதரவு தந்து அவர்கட்கு ஊக்கம் ஊட்டுதல் வேண்டும்.

இந்து மதப் பாடசாலையும் வள்ளலார் இல்லமும் வாலாஜா பாதத்தில் மட்டும் இருந்துவிட்டால் போதாது. தமிழ் நாட்டின் பல இடங்களிலும் தோன்றவேண்டும். அதற்குப் பொது நலத்தை விழையும் அத்தனை மக்களும், நாட்டின் நலனைக் கருதும் அத்தனைச் செல்வர்களும், கல்விபாற் கருத்துக் கொள்ளும் அத்தனைப் பெருமக்களும் ஆலோசனை கூறி ஆதரவு தந்து செயலாற்ற முனைதல் வேண்டும்.

பலவற்றிற்கு உதவி செய்யும் பெருமக்கள், இந்த ஏழைச் சிறுவர்களின் எதிர்கால வாழ்விற்குக் கல்விச் சாலைகட்கு—இலவச இல்லங்கட்குப் பொதுவாகச் சொல்லப்போனால்! தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தயங்காது ஆதரவு தந்தால் தமிழ்நாடெங்கணும் இந்து மதப் பாடசாலைகளும் வள்ளலார் மாணவர் இல்லங்களும் எழும்; எங்கிருக்கும் சிறுவர்களும் ஏற்ற உணவையும் இனிய கல்வியையும் பயின்று பயன் பெறுவர்.

மேற்கூறிய கருத்திற்குப் பண்புடைய பெருமக்களாக விளங்கும் அத்தனைப் பெரியோர்களும் மகிழ்வே பெறுவர். அது மட்டுமன்று, ஆர்வங் கொண்டு ஆதரவு தருவார்கள்.

"அப்பர்" அவர்களை மேலும் மேலும் ஊக்கி அவரைத் தமிழ் நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தி நலம் பெறுவோமாக!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயங்களைக் கேட்கும் அன்பர்களுக்கும் விளக்கம் தருகிறார்கள்.

இவையெல்லாம், பேட்டைகளில் ஆசிரியர் அவர்கள் மனமொழி மெய் எனும் முக்கரணங்களாலும் செய்து வரும் தொண்டுகளாகும். இவற்றைப் பின்பற்றி அவ்வப்பேட்டையிலுள்ள குருகுல அன்பர்களும், மாணவர்களும் தமக்குள்ள ஓர் இணைப்பை உண்டாக்கிக் கொண்டும், மற்ற அமைப்புகளோடு இணங்கியும், தம்மாலியன்ற அளவு தத்தம் பேட்டைவரையிலாவது நல்ல தொண்டுகளைச் செய்ய முன்வரவேண்டும் ஆசிரியரையும் அடிக்கடி தம் பேட்டைக்கு வரவழைத்து அவர்களின் அரிய பெரிய ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குருகுலத்தார் அனைவரின் சார்பிலும், பணித் திட்டத்தில் கண்டுள்ள பன்னிரு வகைகளில் மன்பதைப் பணி செய்ய ஒரு செயற்குழுவையும் அமைத்துக் கொள்ளவேண்டும். தொடர்ந்து சென்னைப் பேட்டைகள் தோறும் 'சான்றாண்மை இயக்கம்' என்னும் போக்கில் தொண்டாற்றி வரவேண்டும்.

குருகுலத்தார் எண்ணிக்கையை மேல் மேல் மிகுத்துக் கொள்ளவேண்டும். குருகுலக் கிழமை இதழாகிய 'முல்லைக் கொடி'யைச் செயற்குழுவின் சார்பில் முறையாகவும் திறமையாகவும் நடத்திப் பொதுமக்களிடையிலும் அது பரவுமாறு செய்யவேண்டும். "இத்தகைய ஒரு நடுநிலை இதழ் நல்ல தமிழ் இதழ் வேண்டுவதுதான்" என்று யாரும் உணர்ந்து முன்வந்து ஆதரிக்கும்படி அதனை நடத்த வேண்டும்.

மொத்தத்தில், "குருகுலத்தார் எல்லாருக்கும் வேண்டியவர்கள்; நடுநிலையானவர்கள்; எந்தக் கட்சியையும் அமைப்பையும் அவர்கள் வெறுப்பதில்லை; அவர்கள் சொல்வதை நாம் கட்டாயம் கேட்கத்தான் வேண்டும்; அவர்களும், ஆதரவு செய்து அவர்கள் சொல்லுபவைகளில் முடிந்தவற்றைப் பின்பற்றவும் வேண்டும்" என்று எல்லாரும் எண்ணும்படியான நிலைமையை உண்டாக்கவேண்டும். பேட்டைத் தொண்டுகளின் நோக்கமும் பயனும் இதுதான். இவற்றைத் தக்கபடி நிறைவேற்றி வைக்க வேண்டியது குருகுலத்தார் அனைவருடைய கடமை! கடமை!! கடமை!!! என்று நினைப்பூட்ட விழைகின்றேன்.

—ந. ரா. ஆடலரசு.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
58 கிடங்குத் தெரு, சென்னை 1.

வாழ்வளிக்கும் இல்லம்

(வே. ந. நாராயணன்)

(முன் தொடர்ச்சி)

(அன்று பேசிய கருத்துக்களை இனி முல்லைக் கொடியில் வெளியிட எண்ணம்; காரணம் அது வள்ளலார் இல்லத்து மாணவர்கள் மட்டும் அறிய வேண்டிய தொன்றன்று; இவ்வையத்து மாணவர்கள் அனைவரும் நினைவுபடுத்திச் செயலாற்ற வேண்டிய தொன்றென்பதே யாம்)

அப் பள்ளியின், இல்லத்தின் அமைப்பையும், சிறப்பையும் செயற்றிறனையும், பயனையும் கண்டபோது நான் வியக்கத்தான் செய்தேன்.

எனக்கும் கவிதையுள்ளம் உண்டுபோல் இருக்கிறது; இல்லையானால் அந்த வியப்பின் வெளியீடு ஒரு பாட்டாகவும் அமைவானேன்?

இதோ அந்த வியப்பின் வெளியீடு.

“அருள்சான்ற “அப்பா”வின்
சாதனையில் பூத்த
அருள்“வள்ள லாரில்லம்”
உருக்குழந்தை கட்குத்
தெருள் வாழ்வை நல்லுணர்வைக்
கைத்தொழிலைப் பண்பைச்
சேர்த்தளித்து ஓங்குவதைச்
சேர்ந்துவந்து காணீர்!
இருள்நீக்கி நல்லறிவின்
ஒளிதன்னைக் காட்டி
இன்பமெலாம் இளைஞர்கட்கு
ஊட்டுமிந்த இல்லம்
பொருள்வேண்டி நிற்கின்ற
ஏழ்மையினைப் பார்த்தும்
பொறுத்திருத்தல் நேர்மையதோ
விரைந்துதவி செய்வீர்”

“நந்துகின்ற பாலரெலாம்
நற்கலைகள் கற்க
ஞானிலத்தில் புதுமையராய்
உண்மையராய் வாழ
இந்துமதப் பள்ளியது
இணையின்றிச் செய்து
இமயத்தின் “எவரெஸ்”டாய்
இலங்குவதைக் காணீர்.
தங்குகின்ற புகழோங்கத்
தரணியிலே இஃது
தருமத்தால் காத்திடுமாம்
தலைவனவன் அன்பு
பொங்குகின்ற மாசிலா
மணியனெனும் பேரான்
பொருள்படைத்தோர்
புலமையுளோர்
உதவிசெய வம்மின்.”

இதுபோன்ற பல பள்ளிகள் தமிழ்நாடெங்கணும் நிலவ வேண்டும். இன்னும் எவ்வளவோ ஏழைச் சிறுவர்கள் ஆதரிப்பாரற்று அறிவு பெறுதமைகின்றனர். அவர்கட்கெல்லாம் உயிருக்கு உணவளித்து உள்ளத்திற்குக் கல்வி பயிற்றி, அவர்களை உயர்ந்த மக்களாக ஆக்கல் வேண்டாமா?

இன்றைச் சிறுவர்களால் உருவாக இருக்கும் எதிர்காலச் சமுதாயம் பொய்யும் பொறாமையும், சூதும் வஞ்சகமும், சாதியும் பேதமும், உயர்வும் தாழ்வும் இன்றிப் பக்தியும் பண்பும், அறிவும் ஆற்றலும், அன்பும் அடக்கமும், வீரமும் விவேகமும் நிறைந்தவர்களைக் கொண்ட உன்னத சமுதாயமாக விளங்க வேண்டுமென்றால், குறிக்கோள் வாழ்வுடைய மக்கள் நிறைந்த சமுதாயமாக விளங்கவேண்டுமென்றால், கடமையும் நாட்டுப் பற்றும் கொண்ட வீரர்கள் வதியும் சமுதாயமாக இலங்க வேண்டுமென்றால், இந்துமதப் பாடசாலைகள் வள்ளலார் இல்லங்கள் பலப்பல தோன்ற வேண்டும் நம் தமிழ் நாட்டில்.

அதற்கான செயலைப் பொறுப்போடு ஏற்றுக் கருத்தோடு செய்பவர் இன்றைய நிலையில் யாராவது உண்டா என எண்ணின் ஒருவரைத் தவிர வேறு யாரும் நமக்குத் தோன்றவில்லை.

அந்த ஒருவர்தான், அந்த ஆற்றல்தான் திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அப் பெரியார், வாலாஜாபாத் பள்ளியையும் இல்லத்தையும் போல, இன்னும் தமிழ் நாட்டின் பல இடங்கட்கும் சென்று புதிய புதிய இந்துமதப் பாடசாலைகளையும் வள்ளலார் இல்லங்களையும் ஏற்படுத்துவாரெனின் இந்தத் தமிழ் நாடு அவரை மிக மிகப் போற்றி வழிபடும்.

ஏழை மக்களின் தோழனாய், ஆதரவற்றவர்களின் அன்பனாய், வாழ்விழந்தவர்களின் வழிகாட்டியாய், என்றென்றும் விளங்கிப் பொன்றாத புகழ் பெறுவார் என்பதில் ஐயம் சிறிதேனுமுண்டோ?

பாடசாலையாலும் இல்லத்தாலும் திரு. முதலியார் அவர்கள் உயர்ந்தார்கள். திரு. முதலியார் அவர்களால் பாடசாலையும் இல்லமும் உயர்ந்தன.

எனவேதான், சிறப்புப் பெற்ற அப் பெரியாரே இச் செயலை—பல இடங்களில் பள்ளி, இல்லம் ஏற்படுத்தும் ஒப்பற்ற செயலை—செய்யக் கூடியவர்கள் என்று கூறினேன்.

திரு. முதலியார் அவர்கள் இறைவன் அருள் பெற்றவர்கள். அவருக்குப் பலரும் அறிமுக மானவர்கள். அவர்கள் இப்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, ஆனி,	தளிர்
7	24-6-55 வெள்ளி.	38

அமைதியை வளர்க்கும் ஆக்க வேலை

நமது நாட்டு முதலமைச்சர் நேரு, இப்போது இரஷ்யா சென்றுள்ளார். அமைதியைப் போற்றும் அருமைத் தலைவர் என்ற முறையில் இரஷ்யாவே அவரை அழைத்திருக்கிறது. இந் நிகழ்ச்சி உலக நாடுகளிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. இரஷ்யாவில் நேரு செய்யும் ஒவ்வொரு செயலையும் மிக்க கூர்மையாக உலக நாடுகள் நோக்குகின்றன. வரலாற்றில் முக்கியதோர் இடம்பெற்று விட்ட இந்நிகழ்ச்சி பற்றிப் பேசாத ஏடு இல்லை என்று துணிபுடன் கூறலாம்.

அமைதியை விரும்பும் நேருவை இரஷ்யா அழைத்துப் போற்றுகிறதென்றால், இரஷ்யாவும் அமைதியைப் பெரிதும் விரும்புகிறது என்பது புலனாகும். இதுவரை யாருக்கும் தராத வரவேற்பை நேருவுக்குத் தந்து பெருமையளித்திருக்கிறது இரஷ்யா. அரச வரவேற்பு நடந்தது; நேரு செல்லுமிடமெல்லாம், நெருக்கியடித்துக்கொண்டு அவரைக் காணக் கூட்டம் ஆர்வம் கொண்டு எழுந்தது. மலர்களைத் தூவித் தம் எல்லையற்ற மகிழ்ச்சியை மக்கள் காட்டிக்கொண்டனர். நேரு தந்த மாம்பழத்தின் சுவையினாலோ, அல்லது வேறென்ன காரணத்தாலோ, புல்கனின் புளகாங்கிதமடைந்து, நேருவுடன் மிகவும் மனம்விட்டு, வேடிக்கையாகவும் பேசியிருக்கிறார். மற்றத் தலைவர்களும், மகிழ்வுடன் நேருவோடு உரையாடியிருக்கிறார்கள். சமாதான முழக்கத்தை இரஷ்யாவின் மூலைமுடுக்கெல்லாம் நேரு முழக்கிவருகின்றார். இன்னவையன்ன பிற செய்திகள் நமக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றன.

நேருவின் இரஷ்யச் செலவின் எதிரொலியாக, இலண்டனிலிருந்தும் நேருவுக்கு அழைப்பு வந்திருக்கிறது. இச் சேதி, நேருவின் இரஷ்யப்பயணம் அரசியல் வானிலே, எத்தகைய முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதற்கோர் அத்தாட்சி. இரஷ்யா, தன் எல்லா இடங்களையும் நேருவுக்குத் திறந்து காட்டியபொழுதுதான், "இரும்புத் திரை" என்ற பெயரும் தகர்க்கப்பட்டுவிட்டது. உலகப் போர் பற்றிய அச்சம் மக்களின் உள்ளத்திலிருந்து மறைந்துவிட்டது. உலக நாடுகள் அனைத்தும் நே[illegible] மனப்பான்மையில் வாழ வேண்[illegible]டும் என்பதற்கான விடிவெள்ளி[illegible] நேருவின் இரஷ்யச் செல[illegible] என்று சுருங்கக் கூறலாம்.

அமைதியை வளர்க்கும் இ[illegible]த்தகைய ஆக்கவேலைகள் மேலும் [illegible]தழைப்பனவாக! உலக அமைதி ஓங்[illegible]குவதாக! அருமைத் தலைவ[illegible] நேரு நீடூழி வாழ்க! என வாழ்த்து[illegible]கிறோம்.

மொழிச் சிக்கல்

அருணன்

ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்நாட்டின் மொழிவளர்ச்சியையும் முக்கியமாகப் பொறுத்திருக்கிறது. சமூக முன்னேற்றம், கலாச்சார முன்னேற்றம் போன்றவற்றிற்கு மட்டுமல்ல, ஒரு நாட்டின் பெருமைக்கும் மொழி காரணமாய் இலங்குகின்றது. பொதுமொழி என்ற ஒன்று ஏற்பட்டு, அதை மக்களும் கற்க வேண்டும் என்று ஏற்பட்டால், பல்வேறு மொழி பேசும் பல்வேறு மக்கள், தங்களின் சொந்த மொழி வளர்ச்சி குன்றி, சமூக கலாச்சார வளர்ச்சி குன்றி, 'கதம்ப நிலையில்' ஆக்கப்படுவார்கள். எனவே, தாய்மொழி அழிவதற்கும், பொதுமொழி காரணமாயிருந்தால் அதில் வியப்பில்லை.

நாட்டின் பொது நடவடிக்கைகளுக்காக, மக்களனைவரும் பொது மொழியைக் கற்க வேண்டும் என்று ஏற்படுத்